# டாபிந்து

பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது

ஆரம்பம் 1984

மலர்: 37 இதழ்: 01 2020 செப்டம்பர்





உள்ளே!


பக்கம் 3 - எமது பணி

பக்கம் 4-5 - நிலைத்திருக்கும் டாபிந்து

பக்கம் 6 - வாழ்த்துக்கள்/எண்ணம்

பக்கம் 7 - அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்குவோம்/ மனிதநேயத்துக்காக குரல் கொடுத்தல்



சுதந்திர வர்த்தக பிரிவினரின் பழைமையான பத்திரிகை

## வியர்வைத்துளி கூட்டமைப்பு

221> வெலபட வீதி, கட்டுநாயக்க.
தொ.பே: 011 4 851 383
மின்னஞ்சல்: dabindu.infoco@gmail.com
Facebook : Dabindu Collective Sri Lanka


# சவால்களை வெற்றி கொண்டு முன்னோக்கி...

பெருமை நிறைந்த முப்பத்து ஆறாம் ஆண்டைக் கொண்டாடும் வியர்வைத்துளி செய்தி இதழானது தான் கடந்துவந்த பாதை பற்றி தன்னடக்கத்துடன்கூடிய பெருமிதத்துடன் இவ்வாறு பதிவுசெய்கின்றது.

தொழிலாளர் உரிமைகளை உறுதிப்படுத்திக்கொள்ளும் போராட்டத்தில் அழியாத நினைவுக் குறிப்பை நிலைநிறுத்தி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஒத்துழைப்புடன் நாம் கடந்துவந்த பாதை கடினமானதாக இருந்தபோதிலும் பெற்றுக்கொண்ட வெற்றிகள் பாரியளவிலானவை ஆகும்.

செய்தி இதழை அடிப்படையாகக் கொண்டு, நிறுவனங்களில் இடம்பெறும் அநீதிகளை அச்சமின்றி அந்நிறுவனங்களின் பெயர்களுடனேயே வெளியிட்டு, பெரும்பான்மையான பெண்களின் உண்மை நிலையை உலகுக்கு வெளிப்படுத்தியும், தொழிலாளர் உரிமைகள் தொடர்பிலான அறிவை வழங்கியும், அவர்களது திறன்களை மேம்படுத்துவதற்காக செய்தி இதழுக்கு அவர்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்க சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொடுத்தும், அவர்களை அறிவில் சிறந்தோங்கச் செய்துள்ளது.

குறித்த துறையினுள் ஒழுங்கமைப்பு ரீதியில் வலையமைப்புக்கு ஊடாகச் செயற்படுகின்ற போதிலும், உலகமயமாக்கல் மற்றும் புதிய தாராண்மைவாதக் கொள்கைகளினால் உலகில் ஏழைகளின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. அதேவேளை இந்நிலைமைகள் உலகின் வட பிராந்தியத்தில் அதிகரித்துச் செல்வதையும் காண முடிகின்றது. அரசியல், சமூகம், பொருளாதாரம் என்பன நல்ல திசையில் பயணிக்கின்றமைக்கான குறிகாட்டிகளைக் கண்டுகொள்ளுதல் வெகுதூரமாகியுள்ளது. ஆதலால் பொருளாதார சுதந்திரம், நீதி, மானிட அபிவிருத்தி, சமத்துவம், ஜனநாயகம் என்பவற்றுக்காக எழுந்து நிற்கும் பொருட்டு சமுதாய ஏற்றத்தாழ்வுகளை விரட்டியடிப்பதற்காக அதிகளவில் உழைக்க வேண்டியுள்ளது.

சுற்றாடல் அழிவு, இனவாதம், மதவாதம், சட்ட ஆட்சியின் வீழ்ச்சி, மூட நம்பிக்கைகள், பால்நிலை அடிப்படையிலான பாகுபாடு, சமூகமயப்படுத்தி அபிவிருத்திப் பாதையை நோக்கி பயணிப்பதைப் புறந்தள்ளி மற்றவர் மீது பகை, அவநம்பிக்கை போன்றவற்றைப் பரப்பி செயலாற்றுதல் என்பன கடந்த காலம் முழுவதும் நாம் எதிர்கொண்ட பயங்கர அனுபவங்களாகும்.

மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளையும் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளையும் கடந்து வந்துள்ள நாம் எங்கு தரித்து நின்றுள்ளோம்?

அண்மைக்கால உலகளாவிய பேரழிவான கொவிட் 19 இனால் பாதிப்புக்குள்ளாகியுள்ள ஆடைக் கைத்தொழில் துறையில் இருந்த அதிகளவானோருக்கு தற்போது தொழில் இல்லாமல் போயுள்ளது. சமூகப் பாதுகாப்பு நடைமுறை, தொழில் பாதுகாப்புத் தன்மை இன்மையினாலேயே அவர்கள் இன்று இத்தகைய பரிதாப நிலைக்கு ஆளாகியுள்ளனர். தீர்மானம் மேற்கொள்ளும் தளங்களில் இத்தகைய சிக்கல்கள் விளித்துரைக்கப்படுவதில்லை. ஆயினும் இந்நாட்டுக்கு அந்நியச் செலாவணியைக் கொண்டுவந்த அவர்கள் தொடர்பில் நியாயமான ஒரு திட்டம், கொள்கை உருவாக்கத்தில் அதிகாரிகளின் கவனம் இதனிலும் பார்க்க அதிகரிக்க வேண்டும். அதற்காக முன்னிற்க தொழிலாளர்களுக்கு சக்தியும் தைரியமும் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திப்பதோடு எதிர்காலத்தில் அவர்களுக்கு பலம் சேர்ப்பதற்காக ஒத்துழைப்போம்.

# என் அன்புக்குரிய சுனிலா சகோதரிக்கு

நான் உங்களை சந்தித்தது 1980களில் ஆகும். அது, அக்காலத்தில் காணப்பட்ட யூனியன் காபய்ட் மற்றும் பொலிடெக்ஸ் கார்மன்ட்டில் பணிபுரிந்த பெண் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்களின் போதாகும். அத்தகைய போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் பெண்கள் இயக்கக் குழுவொன்றை தங்கள் தலையீட்டுக்கூடாகவே நிறுவினோம். அன்று தொடக்கம் நீங்கள் பெண்கள் இயக்கத்தின் முன்னோடியாக விளங்கினீர்கள். மத, குல, வகுப்பு சார்ந்த பேதங்களில் இருந்தும் விடுபட்டு, எல்லாப் பெண்களையும் ஒன்று போல் நடாத்தி அநியாயத்துக்கும் கொடுமைக்கும் அழுத்தத்துக்கும் இனவாதத்துக்கும் எதிராக எழுந்து நின்றது நீங்களே. நீங்கள் வகுத்த அந்தப் பாதையின் பங்காளர்கள் நாமாவோம்.

விவசாயம், தோட்டம், நீர் என்பவற்றுக்கான போராட்டங்களில் தலையீடுகளை மேற்கொண்ட நீங்கள், சுதந்திர வர்த்தக வலயத்துக்குள் பணிபுரியும் பெண் தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டங்கள், வேலைநிறுத்தங்கள் என்பவற்றில் தலையீடுகளை மேற்கொண்டீர்கள்.

மேலும், அவர்களைப் பாதிக்கும் வெவ்வேறு பிரச்சினைகளுக்கு கருத்தரங்குகளுக்கூடாக விழிப்புணர்வூட்டல் மேற்கொள்ளப்பட்டது. மனிதாபிமானத்தின் பெறுமதி தொடர்பில் உங்களுக்கு மிகப்பெரும் புரிதல் காணப்பட்டது. ‘அடையாளம் கண்டால் நீ நான்’ என்ற பாடல் எமது அழியாத நினைவில் தங்கியுள்ளது.

இனப் பிரச்சினைகளின்போது, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்த உங்களது எண்ணக் கருத்துக்கள் சர்வதேசம் வரை பரவிச் சென்றன.

பொதுமக்கள் சுகாதாரம், பெண்ணிலைவாதம், அரசியல், மற்றும் ஏனைய முறைசார் துறைகளில் எம்மையும் ஊக்கப்படுத்திய வண்ணம் முன்னணி வகித்தீர்கள். பெண்கள் போராட்டங்கள் தொடர்பில் சிறந்ததொரு புரிதலைப் பெற்றிருந்தமையினால் பெண்கள் போராட்டம் எனும் பெயரிலான புத்தகமொன்றை வெளியிட்டீர்கள்.

சுனிலா, நீங்கள் சிலபோது ஒரு தாயாக இருந்தீர்கள். சிலபோது ஒரு தோழியாக இருந்தீர்கள். எமது கூட்டமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் நிதியுதவிப் பணிப்பாளர் குழுவில் இருந்து எமது அமைப்பின் மதிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்துக் கொடுத்தது நீங்களே. உங்களைப் போன்ற ஒருவர் எங்கள் மத்தியிலிருந்து எப்போதும் பிரிந்து செல்ல முடியாது. நீங்கள் அத்தனை பெறுமதி வாய்ந்த வகிபாகத்தை வகித்தவர். உங்களுக்கு எங்கள் மரியாதை என்றென்றும் உரித்தாகட்டும்.







எச். ஐ. சமன்மலி

# தலைமைத்துவப் பயிற்சி நெறியின் இறுதிக்கட்டம் நிறைவு



வவுனியா மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் ஆடைக் கைத்தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 25 பேருக்கு தொழிலாளர் சட்டம் மற்றும் ஆண் பெண் பால்நிலை தொடர்பில் விழிப்புணர்வூட்டல் பயிற்சித் திட்டத் தொடர் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் கிளிநொச்சி சோலைவனம் விருந்தகத்தில் இடம்பெற்றது.

தலைமைத்துவப் பண்புகள், தொழிலாளர் சட்டங்கள், ஆண் பெண் பால்நிலை முதலிய பிரச்சினைகளை விளித்துரைத்து இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் ISD இன் யோகேஷ்வரி கிருஷ்ணன் மற்றும் கார்திகா தனன்ஜன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர். இந்தப் பயிற்சிக் காலத்தில் பெற்றுக்கொண்ட அறிவைப் பயன்படுத்தி நிறுவன மட்டத்தில் நிலவும் சிக்கல்களைக் கூட்டாகத் தீர்த்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் இப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன், நிறுவன மட்டத்திலும், வாழும் பிரதேசத்திலும் ஏற்படும் பிரச்சினைகளை விளித்துரைக்க வேண்டிய விதம், அவற்றை முறையீடு செய்தல் மற்றும் உரிமைகளைக் கூட்டாக வென்றெடுத்தல் என்பன தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

கொவிட் 19 தொடர்பில் நிறுவனங்களின் நிலைப்பாடு சம்பந்தமாக இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், ஊழியர்களின் தொழிலுக்கு இதனால் ஏற்படும் பாதிப்புத் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இறுதியாக, எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் கவனம் செலுத்த வேண்டிய நிறுவனங்கள் தொடர்பிலும், கடந்த நான்கு பயிற்சித் தொடர்கள் தொடர்பிலும் ஆய்வு செய்யப்பட்டது. அவ்வாறே தொழிநுட்பத்தின் வாயிலாக யோகேஷ்வரி அவர்களைத் தொடர்புகொண்டு எதிர்காலத்தில் முகங்கொடுக்க வேண்டிய சவால்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பில் மேலும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன், தொழில் வாழ்விலும் சமூக வாழ்விலும் தலையீடு மேற்கொள்ளல், சமூக வாழ்வில் தலையீடு மேற்கொள்கின்றபோது தனிப்பட்ட வகையிலும் கூட்டாகவும் செயலாற்றுதல் ஆகியன தொடர்பிலும் கலந்துரையாடல் இடம்பெற்றது.

# தரப்பினர்களுடனான நான்காவது சந்திப்பு வவுனியாவில்...

நிறுவனங்களில் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை விளித்துரைக்கும் பொருட்டு வியர்வைத்துளிக் கூட்டமைப்புக்கூடாக அமைக்கப்பட்ட தரப்பினர்களது நான்காவது சந்திப்பு 2020.08.21 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு வவுனியா நெல்லி ஸ்டார் விருந்தக மண்டபத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் தொழிலாளர் திணைக்களம், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பொலிஸ், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் சிவில் அமைப்புக்களின் அங்கத்தவர்கள் பங்கேற்றனர்.

முதலில் அனைவரையும் வரவேற்று வியர்வைத்துளி கூட்டமைப்பின் நிகழ்ச்சித்திட்ட ஒருங்கிணைப்பாளர் சமிலா துஷாரி உரையாற்றினார். அவர், கடந்த காலங்களில் தரப்பினர்களின் சந்திப்புக்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்களை சபையினருக்குத் தெரியப்படுத்தியதுடன், கொவிட் 19 பாதிப்பின் காரணமாக ஆடைத் தொழிற்றுறை ஊழியர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த நிலைமைகள் குறித்தும் விளக்கமளித்தார். இதற்கிடையில், வவுனியா பகுதியின் தொழிலாளர் பிரச்சினைகள் தொடர்பில், வருகைதந்திருந்த அனைவரதும் கவனத்தைப் பெற்றுக்கொண்டு பொதுக் கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டு, அதில் பின்வரும் விடயங்கள் அடையாளம் காணப்பட்டன.

வவுனியா பகுதியில் நடாத்தப்பட்டுவரும் ஆடைக் கைத்தொழிற்சாலைகளில் நிலவும் முறைகேடுகள் காரணமாக பெண் ஊழியர்கள் தமது தொழில் தொடர்பில் கவலையுடன் செயலாற்றுவதாகவும், தரமற்ற உணவுகள், லீவு எடுப்பதில் காணப்படும் சிரமங்கள், தொழில் புரியும் காலத்தில் நீர் அருந்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படாமை, சில சந்தர்ப்பங்களில் பணியில் ஈடுபட்டுள்ளபோது மயக்கமுற்று விழுதல், கொவிட் 19 இற்குப் பின்னர் சில நிறுவனங்களில் சமூக இடைவெளி பேணல் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள போதிலும் சில நிறுவனங்களில் அவை வழங்கப்படாமை, தனிப்பட்ட விடயங்களுக்காக லீவு எடுத்தால் பெற்றோர் அல்லது கணவரை அழைத்து விசாரணை செய்தல் முதலான நிலைமைகளுக்கு உள்ளாக வேண்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் தொழிலாளர் திணைக்களம், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பொலிஸ், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் அங்கத்தவர்கள் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடினர். இறுதியில், அடையாளம் காணப்பட்ட தொழிற்சாலைகளுக்கு மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் பற்றி எழுத்து மூலம் அறிவிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.



# நிலைத்திருக்கும் டாபிந்து

உலகின் மானுட நாகரிகம், ஆரம்பத்திலிருந்து இன்று வரை உடல் மற்றும் உளவியல் ரீதியிலான மனித உழைப்பினாலாலேயே முழு உலகையும் கட்டியெழுப்பியிருக்கின்றது. உலகில் உள்ள நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் தொழில் நிறுவனம் ஆகிய உற்பத்திக் காரணிகளுள் பெறுமதிமிக்க உற்பத்திக் காரணி மனித உழைப்பு என்றால் அது மிகையாகாது. நிலைமை அதுவாக இருப்பினும் மனிதநேயத்துக்காகக் குரல் எழுப்புதல் என்பது நிறுத்தப்பட்டுள்ளது.

1978 ஆம் ஆண்டு திறந்த பொருளாதாரம், விவசாயப் பொருளாதாரத்தின் வீழ்ச்சியுடனேயே எமது நாட்டுக்குள் பெருக்கெடுத்தது. வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்துக்கும் ஆயிரக்கணக்கான வேலையற்றோருக்கும் இது பாரியதொரு சந்தர்ப்பமாக விளங்கியது. விவசாயப் பொருளாதாரத்தை இழந்திருந்த இளைஞர் யுவதிகளுக்கு, இலங்கையில் கட்டியெழுப்பப்பட்டிருந்த சுதந்திர வர்த்தக வலயம் பின்புலமாக விளங்கியது.

பணி நீக்கம் செய்யப்பட்டிருந்த அதிகளவான தொழிலாளர்களுக்கு தொழிற் சங்கமொன்றை உருவாக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பம்கூட கிடைக்கப்பெறாத காலகட்டத்தில், அதாவது 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 'வியர்வைத்துளி' கூட்டமைப்பு உருவாகியது.








அதுவரையில், எந்தவொரு ஒழுங்கமைப்போ அல்லது தொழிற்சங்கமோ சுதந்திர வர்த்தக வலயத்தினுள் உருவாகியிருக்கவில்லை. அக்காலகட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான பெண் தொழிலாளர்கள் வலயத்தினுள் தொழில் புரிந்ததோடு, நிறுவனத்தினுள்ளும், வரும்போகும் வழியிலும், தங்குமிடத்திலும் பல்வேறு அழுத்தங்களுக்கும் பாலியல் துன்புறுத்தல்களுக்கும் வன்முறைகளுக்கும் ஆளாகவேண்டிய நிலை ஏற்பட்டது.







மேலும், திடீரென தொழிற்சாலைகளை மூடும் நிருவாகிகள் குறித்தும், ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தாது தப்பிச்செல்லும் நிருவாகிகள் குறித்தும் தமது தொழிலாளர் உரிமைகளைக் கோரி ஆர்ப்பாட்டம் செய்கின்ற தொழிலாளர்களது பிரச்சினைகள் குறித்தும் வியர்வைத்துளியினால் செய்திகள் வெளியிடப்பட்டன. தொழிலாளர் செய்திகள், தமது ஆக்கத்திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்கான கவிதை, சிறுகதை மற்றும் சுயாதீன ஆக்கங்கள் போன்றவற்றை எமது டாபிந்து செய்திமடலில் நாம் அச்சமின்றிப் பிரசுரித்தோம்.






5ஆம் பக்கம்...

நிலைத்திருக்கும்... 4ஆம் பக்கத் தொடர்ச்சி



















இவற்றைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு அரசாங்கத்தின் கைகள் எம் பக்கம் திரும்பாமலில்லை. அது சுதந்திர வர்த்தக வலயத்தினுள் இடம்பெற்ற அநியாயங்களை உலகிற்கு சத்தமிட்டுக் கூறியமையினாலாகும்.

வலயத்தினுள்ளும் அதற்கு வெளியிலும் மேற்கொள்ளப்படும் வேலை நிறுத்தங்களுக்கு எமது ஆதரவைத் தாராளமாக வழங்கினோம். மேலும், பியகம சுதந்திர வர்த்தக வலயத்தினுள் 1992 ஆம் ஆண்டு எமது கிளையொன்றை நிறுவிக்கொள்ள முடிந்தது.

நிதிசார் உதவிகள் கிடைக்காமல் போனமையினாலேயே அதனை நீண்ட காலத்துக்குத் தொடர்ச்சியாகக் கொண்டுநடாத்த முடியாமல் போனது. ஆயினும் எமக்கு வவுனியா, கிளிநொச்சி மற்றும் மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் ஆடைக் கைத்தொழிற்சாலைகளை, தமிழ்ப் பெண் தொழிலாளர்களுடன் இணைந்து, கண்காணிக்க முடிந்தது. அவர்களது சுகாதாரப் பிரச்சினைகள், சம்பள ஏற்றத்தாழ்வுகள் தொடர்பிலான ஆண் பெண் பால்நிலை பாகுபாடு குறித்து, வடக்கில் சிவில் சமூக அமைப்புக்களையும் அரச நிறுவனங்களையும் இணைத்துக்கொண்டு இன்றுவரை அத்தகைய நிகழ்வுகளை நடாத்திச் செல்ல முடிந்துள்ளமை குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

தற்போது வலயத்தினுள் சிவில் அமைப்புக்கள், தொழிற் சங்கம் என்பன தோன்றி வருகின்றன. நாம் வலயத்தினுள் இடம்பெறும் முறைகேடுகளுக்கு எதிராக எழுந்து நிற்பதற்காகவே அவர்களுக்கான நிறுவன ஒத்துழைப்புக் குழுவொன்றை நிறுவினோம்.

தொழில், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் காணப்படினும் அவை நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்பது குறித்துக் கண்காணிப்பதற்கு அரசாங்கத்தின் பொறுப்புவாய்ந்த அதிகாரிகளின் தலையீடு அவசியமாகும். அத்தகைய தலையீடுகள் இடம்பெறாமையினால் இழைக்கப்படும் சகல அநீதிகளும் டாபிந்து கூட்டமைப்பை நோக்கி வந்த பல சந்தர்ப்பங்கள் உள்ளன.

கட்டுநாயக்க வர்த்தக வலயத்தை நிறுவி 2 – 3 ஆண்டுகளின் பின்னர் தொழிலாளர் சட்டம் மாத்திரமன்றி பெண் தொழிலாளர்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள், வன்முறைகள், அவர்கள் வியர்வை சிந்தி சம்பாதிக்கும் சம்பள அட்டையைப் பறித்துச் செல்லல், காற்சட்டையின் சிபரினைத் திறந்து அந்தரங்க உறுப்பைக் காண்பித்து யுவதிகளை உளவியல் ரீதியாக வீழ்த்துதல் மற்றும் செய்யும் தொழிலுக்கு மதிப்பளிக்காது கீழ்த்தரமான வார்த்தைகளினால் இழித்துரைத்தல் முதலிய பல பிரச்சினைகளை எதிர்கொண்டனர். அதனால், எமது செயற்பாடுகளை டாபிந்து பத்திரிகையோடு மாத்திரம் மட்டுப்படுத்தாது, சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்தல், கருத்தரங்குகள், பட்டறைகளை நடாத்துதல், சுய தொழில் பயிற்சிகளை வழங்குதல், தலைமைத்துவப் பயிற்சி, இளைஞர் முகாம், வலுவூட்டல் திட்டங்கள், இலக்கிய நிகழ்வுகள், கள வெளிப்பாடு மற்றும் வலைப்பின்னல் என்பன எமது நிறுவனத்தின் ஆரம்பக்கட்ட பிரயத்தனங்களாகத் திகழ்ந்தன. தொழிலாளர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாமல் போனமையே அதற்கான காரணமாகும்.

ஆணாதிக்கச் சமூகத்தின்கீழ் எமது நாட்டினுள் வாழும் பெண்கள் பல்வேறுபட்ட வன்முறைகளுக்கு ஆளாகியதுடன், அந்நிலை நாளுக்கு நாள் அதிகரித்தது. அதனாலேயே சட்ட நிவாரணம் மற்றும் நிதி நிவாரணம் என்பவற்றைப் பெற்றுக்கொடுப்பதில் ஈடுபட்டோம்.

எவ்வாறாயினும், 36 ஆண்டுகளாக ‘வியர்வைத்துளியை’ சோரம்போக விடாது வைத்திருந்ததோடு, எதிர்காலத்திலும் எமது பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக நாம் முன்னிற்கின்றோம். அதற்காக இதுவரை இப்பணிக்கு ஆதரவு வழங்கிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியுதவி நிறுவனங்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்றுபோல் இன்றும் எம்மோடு கைகோர்த்துள்ள அமைப்புக்களுக்கும் எமது வாசகர்களுக்கும் தொழிலாளர்களாகிய உங்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எச். ஐ. சமன்மலி

# எண்ணம்

ஆ நதியோ… கடந்த நாட்களில் எங்க போய்த் தொலைஞ்சா? சந்தைப் பக்கம் கூடக் காணல்லையே. ஏனடா, கொரோனாவினால் வேலைத்தளங்களை மூடிவிட்டார்களே. இங்கே இருந்து என்ன வேலவெட்டி முடிக்கப்போறன்? நல்லவேளை பிள்ளைகள ஊருக்கு அனுப்பின போது நானும் பஸ்ஸுக்குள் பாய்ஞ்சிட்டன். அங்கயும் ஊரடங்குச் சட்டம். அந்த நாட்களில் தோட்டத்துல பலா, ஈரப்பலா, கிழங்கு, வற்றாளைக் கிழங்கு என எல்லாம் இருந்ததால எப்படியோ வயிற்றுப் பசியைப் போக்கிக்கொள்ள முடிஞ்சது. நாங்க இனி ஊருக்குப் போனதால எப்படியோ கொரோனாவில இருந்து தப்பிக் கொண்டோம்.

விடுதியில இருந்து போயிரா விட்டால் என்ன நடந்திருக்கும். நாற்று நட்டாற்போல தூங்க வேண்டியிருந்திருக்கும். ஒரு மீட்டருக்குப் பதிலாக ஒரு அடியாவது இருக்க முடியுமா? கடைகள் மூடப்பட்டு சாப்பிட வழியின்றி இருந்தோம். கடனுக்குச் சாமான் வாங்கிய கடைகளில், விடுதிகளின் அடையாள அட்டைகளை வைத்துக் கொண்டு பெரிய குழப்பமாத்தான் இருந்திச்சு.

ஆ… எனக்கு சொல்ல ஏலாம போயிட்டு. வேலை ஆரம்பிச்ச பிறகு பெக்டரிக்குப் போனா… பிள்ளையின்ட வயசு அதிகம், வேலையில சேர்த்துக்கொள்ள முடியாது என்று பொஸ் சொன்னார். எனக்கு கோபம் தலைக்கேறிட்டு. பல வருஷமா கால் முறிவு சீராகும் வரை நின்றுகொண்டே வேலை செய்து மூட்டுக்கள் வீங்கியும், நெஞ்சில் களைப்புடனும் பல வருஷங்கள் உழைத்து அந்நியச் செலாவணிய ஈட்டிக்கொடுத்த எங்களை நடத்துற முறையும் என்டா. மிச்சமிருக்கிற உயிர் கூட்டை காப்பாத்துறத்துக்கு வேறொரு வேலை தேடிக்கொள்ள…. வளைந்து வலுவிழந்துள்ள கால்கள் ரெண்டுலயும் பலம் இருக்கு. எங்களைச் சேர்த்துக்கொள்ள யார் விரும்புவார்?

நான் கேள்விப்பட்டேன்.. BOI நுழைவாயிலுக்கு அருகில் மேன்பவர்கள் வந்து பிள்ளைகளை வேலைக்கு எடுக்கிறார்கள் என்று. அவர்களுக்கு அழகு, வயசு பத்தியெல்லாம் பிரச்சினை இல்லையே. 1000 ரூபா… 1200 ரூபா துண்டுகளுக்கு வேலைக்குச் சேர்த்துக்கொள்ள முடியுமே. ஆனா… வேலைக்கு உத்தரவாதமில்ல. நிறுவனத்திலிருந்து வழங்கப்படும் எந்தவொரு கொடுப்பனவும் இல்ல. ஆனா… இப்ப எங்களுக்கு மேன்பவர்களது துணையுமில்லையே.

கொரோனாட ஆரம்பக் கட்டங்கள்ல எந்தவொரு தொல்லையுமின்றி பஸ்களில் சென்றோம். தனித்தனி சீட்களில் சொகுசாக இருந்துகொண்டு போனோம். துன்புறுத்தல்கள், அழுத்தங்கள் எதுவும் இல்லாம…. டிக்கட் எடுக்கிறத்துக்கும்… மீதிப்பணம் எடுக்கிறத்துக்கும்… முன்னால போங்க என்ற கண்டக்டர்ர சத்தத்தில இருந்தும் தப்பி பஸ்ஸில பயணிச்சோம். இப்ப மறுபடியும் தேங்காய்கள ஏற்றுவதைப் போலத்தான் எங்களயும் ஏத்துறாங்க.

எங்களுக்கு இழைக்கப்பட்ற அநீதிகள யாரிட்ட சொல்றது?

திரும்பவும் ஊருக்குப் போனாலும் என்னத்த செஞ்சி கிழிக்கப்போறம்? முன்பு என்றால் நாங்க விவசாயத்த செஞ்சி அதாலயே வாழ்ந்தோம். அதெல்லாம் இப்ப புதைகுழிக்குப் போயிட்டு. புதிய அரசாங்கம் திரும்பவும் நாட்டுக்குப் பொருத்தமான தொழிற்சாலைகளை உருவாக்க கலந்தாலோசன செய்யுது. அப்படி நடந்தா நல்லதுதான். ஊர்ல இருந்தே வேலை செய்து போசணையான உணவுகள உண்டு குதூகலமா வாழலாம். எங்களுக்கும் இந்த கந்தகப் பூமியில ஆயிரம் கஷ்டங்கள் படவேண்டிய தேவை இருக்காது.

அதென்டா உண்மைதான் நதியோ. சேமலாப நிதிய எடுத்துக் கொண்டு ஊருக்குப் போகத்தான் நானும் நினைச்சிட்டு இருக்கன். எங்கட நாட்ல கொரோனா குறைவா இருந்தாலும் வெளிநாடுகளில் இன்னும் அது முடிவுக்கு வந்தபாடில்லை. சிலநேரம் மூலப்பொருட்கள் கிடைக்காட்டி ஆடைக் கைத்தொழில் வீழ்ச்சியடையலாம். என்ன நடந்தாலும் அரசாங்கம் மேற்கொண்ட வலுவான தீர்மானத்தினால கொரோனாவுல இருந்து தப்பித்துக் கொண்டோம்.

**சமந்தா**

# டாபிந்து 36ஆவது ஆண்டு நிறைவுக்கான வாழ்த்துக்கள்!

## வாழ்த்துக்கள் சூடுகிறேன்

உழைப்பைச் சிந்தும்
தொழிலாளர்களுக்காக
போராடும் செய்திமடல் டாபிந்து
உனது கரங்களில் உள்ளது
உழைக்கும் வர்க்கத்தினரின்
மனதின் பலமே.
தொழிலாளர் சமூகத்தின்
பிரச்சினைகளுக்கு
குரலெழுப்பும் கூட்டமைப்பே
டாபிந்து!
குலபேதம், மதம், இனம்
தராதரம் பாராத
சுதந்திரமான செய்தி மடல்
டாபிந்து.
வாழ்த்துகிறேன் உன்னை
நெடுநாள் நிலைத்திருக்க!

**குமுதினி அபேரத்ன**

## 36ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் டாபிந்துக்கு எமது வாழ்த்துக்கள்!



பெண்களின் கண்களை
திறந்தாய்
அறிவு விருத்தி கிடைத்தது.
மக்களுக்காக
கொரோனா காலத்தில்
உணவுப் பொருட்களையும்
பெண்களுக்கான
அத்தியாவசியப் பொருட்களையும்
வழங்கினாய்!
உன் பணி
உலகெங்கும் பரவ
வாழ்த்துகிறேன்.

**ரூபி**

## 36ஆவது வருட பூர்த்தியைக் கொண்டாடும் டாபிந்துக்கு வாழ்த்துக்கள்!

உங்களது சேவையை
தொடர்ச்சியாக நிறைவேற்ற
எங்களது வாழ்த்துக்கள்.
நீங்கள் பெண்களின்
அறிவுத் தாகத்தை தீர்ப்பதற்கு
நடவடிக்கை எடுத்தீர்கள்.
அதேபோல அனுபவங்களை
மேம்படுத்தினீர்கள். டாபிந்து!
உங்களது ஒவ்வொரு சொல்லும்
நிலைபேறாக மக்களிடையே
நல்லிருப்பை ஏற்படுத்துவதை
உறுதிப்படுத்தி வாழ்த்துகின்றேன்.

**சன்னதன்**

## 36 ஆவது ஆண்டில் காலடி பதிக்கும் டாபிந்தே..

ஒரு நல்ல புத்தகம் திறந்துகொண்டால்
நரகத்தின் வாசல் மூடப்படும்.
நல்லதொரு பாதையைக் காட்டும்
நல்ல புத்தகமான டாபிந்தே
உனக்கு எங்கள் 36ஆவது ஆண்டு நிறைவு
நல்வாழ்த்துக்கள்.
உனது சேவைகள் சொல்லில் அடங்காதவை
எமது வன்னி மாநகரில்
உனது சேவைகள் அளப்பரியன.
விசேடமாக தொழிலாளர் உரிமை
ஆண் பெண் சமத்துவம்
மருத்துவ முகாம் போன்ற
பெருமதிமிக்க சேவைகளை நினைத்து
நாம் பெருமிதம் அடைகின்றோம்.
தாமுண்டு தம் வேலையுண்டு என வாழும்
மக்கள் மத்தியில்
பிறருக்காக குரல்கொடுக்கும்
உனது சேவைகள் சொல்லில் அடங்காதவை.
முக்கியமாக பெண்களின் உரிமைகள்
அவர்களுக்கு நடக்கும் கொடுமைகள்
என்பவற்றை அவர்களுக்கு தெளிவூட்டி
அதை ஆண்களுக்கும் புரியவைத்து
தொழில்புரியும் இடத்தில்
ஆண் பெண் இருபாலாரும்
சகோதரத்துவத்துடன் வாழ
வழிவகுத்துக்கொடுத்த உனது சேவைகளை
நாம் என்றும் மறக்கமாட்டோம்.
உனது பேரன்புக்கும் பெரும் மதிப்புக்கும்
கௌரவமான மரியாதையைத் தந்து
உன்னை வாழ்த்துகின்றோம்.
வாழ்க உன் சேவை…
வாழ்க உன் பணி!

**பத்மநாதன்**
**டாபிந்து**
**வவுனியா இணைப்பாளர்.**

## நிலைக்கட்டும் அன்னை டாபிந்து

தொழிலாளர்
பிரச்சினைகளை சந்தித்தும்
பின்னிற்காது வருகைதந்தாய்
முன்னோக்கி. ஊட்டமளித்து
அறிவையும் நலனையும்
நிலையாய் எமக்களித்த
அன்னை டாபிந்து

**ரோஷினி வீரசிங்ஹ**

# அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்குவோம்!

2020 ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெற்றது கொரோனாத் தொற்றுக்கு மத்தியிலாகும். மக்கள் அச்சமேதுமின்றி தமது தேர்தல் தொகுதிகளுக்குச் சென்று தமது விருப்பத் தெரிவுகளை வழங்கினர். மக்கள் ஆணையின் படி பொதுஜன பெரமுனவே வெற்றியீட்டியது.

புதிய அரசாங்கம் தேர்தலில் வேண்டிநின்ற பலத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. மக்கள் அவ்வாறு பெற்றுக்கொடுத்திருப்பது நாட்டில் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கலாசார அம்சங்களில் கவனம் செலுத்தி அவை குறித்துச் செயற்படுவதற்கும், சட்டத்துக்கு மதிப்பளிக்கும் சமூகமொன்றை உருவாக்கும் நோக்கத்திலும் ஆகும்.

மக்களுடைய வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக பல்வேறு சலுகைகளைப் பெற்றுத் தருவதாகத் தம்பட்டம் அடித்துக்கொண்டு, தாம் அதிகாரத்தைக் கைப்பற்றியதும் சொல்வதைச் செய்து, வரிச் சுமையிலிருந்து மக்களை மீட்டு நாட்டை வளம் பெறச் செய்வதாகவும், அத்துடன் தொழில் பிரச்சினை, சம்பள அதிகரிப்பு போன்றவற்றுக்கான பல்வேறு உறுதிமொழிகளை உளறியும் மேடைகளில் மிகையாகவும், ஒருவரை ஒருவர் அவமானப்படுத்தியும் ஒழுக்கமின்றி பேசினர்.

எம்மிடம் பல்வேறு வாக்குறுதிகளை முன்வைத்து அவர்கள் ஆட்சிக்கு வருவது அவர்களது வளர்ச்சிக்காக மட்டுமே ஆகும். நாம் சுமக்க நேர்ந்துள்ள தனிநபர் கடன் சுமையைப் பார்க்கும்போது குறித்த நிலைமையை அது சிறப்பாக வெளிக்காட்டி நிற்கிறது. அதிகாரம் இல்லாத சந்தர்ப்பத்தில் ஆரம்பத்தில் இருந்த கட்சியை மறந்து அப்பக்கத்துக்கும் இப்பக்கத்துக்கும் பாய்ந்து ஆதாயம் தேடிச் செயற்படுவர். இல்லாவிடின் தமது கட்சிக்குள் தலைமைத்துவத்தை பெற்றுக்கொள்ளப் போராடுவார்கள். இத்தகைய நிலைமைகளுக்கு மத்தியில் நாட்டை எவ்வாறு ஆட்சி செய்வது?

இப்போது மக்களால் வழங்கப்பட்டுள்ள இறைமை அதிகாரத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். கொரோனாத் தொற்றினால் நாட்டின் பொருளாதாரம் பின்தங்கியுள்ளது. தற்போது புதிய அரசாங்கம் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரப் படுகுழியிலிருந்து நாட்டை மீட்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அபிவிருத்தியடைந்த நாடொன்றைக் கண்கூடாகக் காணவே மக்கள் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.

கொரோனா அச்சுறுத்தலின் காரணமாக தொழிலின்மை இலட்சக் கணக்கில் அதிகரித்துள்ளது. குறிப்பாக தனியார் மற்றும் ஆடைக் கைத்தொழில் துறைகளில் பணிபுரிந்தவர்களது வேலைகள் பறிபோய்க்கொண்டு வருகின்றன. நீண்ட காலமாகப் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு பல்வேறு கொடுப்பனவுகளை அறிமுகப்படுத்தி அவர்களை தொழில்களிலிருந்து வெளியேற்றுகின்றனர். குறிப்பாக ஆடைக் கைத்தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைக்காத காரணத்தினால் அத்தொழிலாளர்களின் தொழில்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. அதனால் நாட்டின் பொருளாதாரம் மிகவும் கீழ்மட்டத்துக்கு வீழ்ச்சி கண்டுள்ளது. அதிலிருந்து மீள்வதற்கு புதிய கருத்தியல்கள் தேவைப்படுகின்றன. நாம் மீண்டும் விவசாயப் பொருளாதாரத்தை நோக்கிச் செல்ல வேண்டும். பலா விதையொன்று நிலத்தில் விழுந்தாலும் அது தானாகவே மரமாகும் அளவுக்கு வளமான மண் எமது நாட்டில் அமைந்துள்ளது. நாம் செய்ய வேண்டியது ஜனநாயக சீர்திருத்தத்துக்கூடாக உண்மையான அபிவிருத்தியை நோக்கி நகர்ந்து நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே ஆகும்.

**எச். ஐ. சமன்மலி**

# டாபிந்து 36ஆவது ஆண்டு நிறைவுக்கான வாழ்த்துக்கள்!

## 36ஆம் ஆண்டில் அடியெடுத்துவைக்கும் டாபிந்து

நாமாக வாழ்வதற்கு
இதுவே நமக்கு கற்றுத்தந்த
வாழ்க்கை நம் கண்ணீர்த்துளி
கீழே விழும்போது கைகொடுத்த கரங்கள்
நாம் ஒற்றுமையாக இருப்பதற்கு
கற்றுத்தந்த பாடம் இதுவே
வெல்வோம் வெல்வோம் என நினைத்து
கீழே விழவில்லை நாம் எழுந்துவிட்டோம்
வாருங்கள் எம் உரிமைகளை
ஒற்றுமையாக வென்றுகாட்டுவோம்.
பெண்களே இது நம் சாதனை
உரிமைகளின் சாதனையை
வெல்வோம் எம்மை வழிநடாத்திய
டாபிந்துக்கு நன்றி

**ஏ. சாந்தினி**
**ஏ. அஞ்சலினா**
**வவுனியா – மணிப்புரம்**

## நீடூழி வாழ்க!

36 வருடங்களாக
அச்சமின்றி முன்னின்று
எங்களுக்கு எப்போதும்
பலம் கொடுத்தாய்
தங்குமிடங்களில் போலவே
நிறுவனத்தினுள்ளும்
பட்ட துயரங்களால்
வீழவில்லை டாபிந்து உன்னால்தான்.

**நதீகா பிரிதர்ஷனி**

## வியர்வைத்துளியின் சிறந்த பயணம்

வியர்வைத்துளியே நீ உனது
36ஆவது வயதில் கால்தடம் பதிக்கின்றாய்
சிலைகளின் அழகு செதுக்கிய சிற்பியாய்
வெளிப்படும் வியர்வைத்துளியே...

உழைப்பவர்களின் ஒற்றுமையையும்
உறுதியையும் எமக்களித்தாய்
எல்லோரும் சேர்ந்து போராடினால்
வெற்றியை அடைய முடியும் என்பதை
எமக்கு சொல்லித் தந்தாய்
வியர்வைத்துளியே...

வியர்வைத்துளியின் வாசத்தை
கண்டவள் நீ...
தேனீக்களும் நீயும் ஒன்றே
வியர்வைத்துளியே....

புவி சுழற்சியின்றி இரவு பகல் பாராது
உன் முயற்சியின்றி மனித வளர்ச்சி
இங்கு ஏது வியர்வைத்துளியே...
உன் பயணம் நூறாண்டு தொடர
உன் பிறந்த தினத்தில்
நீடூழி காலம் வாழ என் வாழ்த்துக்கள்!

**சிறீகாந்தி**
**கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர்**

# மனித நேயத்துக்காக குரல் கொடுத்தல்

எமது நாடுபூராவும் கட்டுப்பாடின்றி போதைப் பொருள் பாவனை பரவிச் செல்கின்றது. இந்த போதைப் பொருட்களை வறிய குடும்பங்களே அதிகளவில் பயன்படுத்துவதோடு மூளைசாலிகளே ஒவ்வொரு பெயர்களில் நாட்டுக்குள் அவற்றைக் கொண்டு வருகின்றனர். அவற்றை சூட்சுமமான பல்வேறு நுட்ப முறைகளைப் பயன்படுத்தி நாட்டுக்குள் கொண்டுவரும் போக்கு பாரியவில் வியாபித்துள்ளதுடன், அதன் பொறியினுள் பிள்ளைகளும் சிக்கியுள்ளனர். போதைப் பொருட்களை காவிச் செல்வதற்காகப் பெண்கள் ஈடுபடுத்தப்பட்டிருப்பதை ஊடகங்களின் வாயிலாக அறிய முடிகின்றது. அவர்கள் அவற்றை விநியோகிக்க ஒத்துழைப்பு வழங்குவது வறுமையின் காரணமாகவா? இந்த போதைப்பொருள் பாவனை பிறக்க இருக்கும் குழந்தைக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் பிரச்சினையாகும். இத்தகைய போதைப் பொருட்களுக்கு அடிமையாதலினால் உடல் பலவீனமடைந்து தொழிற்றிறன் குறைவடையலாம். வெவ்வேறு பெயர்களிலுள்ள போதைப் பொருட்கள் உடலுக்குப் பாரியளவில் கேடு விளைவிக்கின்றன. எதிர்காலத்தில் இது ஒரு தேசிய பிரச்சினையாக மாறுவதோடு இந்நிலை குடும்பக் கட்டமைப்புக்கள் சீர்குலையவும் காரணமாகின்றது.

கடந்த காலங்களில் பாரிய அளவில் கள்ளச்சாராய வியாபாரத்தில் ஈடுபடுபவர்களைக் கைது செய்து அவற்றை இலை குலை ஆறுகளில் ஊற்றியதோடு, கஞ்சாத் தோட்டங்களையும் சுற்றி வளைத்து அவற்றுக்குத் தீ வைத்து அழித்த விதம் ஊடகங்களின் வாயிலாகக் காண்பிக்கப்பட்டது. கொரோனா காலகட்டத்தில் மதுபான சாலைகள் மூடப்பட்டிருந்தமையினால் நாடு முழுவதிலும் அது பரவிக் காணப்பட்டது. ஆயினும் கிலோ மற்றும் டொன் அளவில் கைப்பற்றப்படும் போதைப் பொருட்களுக்கு என்ன நடக்கின்றது என்பது யாருக்கும் தெரியாது. சட்டத்தைப் பேணிக்காக்க வேண்டிய உயர் அதிகாரிகள் சிலர் இதற்காகத் தமது ஆதரவை வழங்குகின்றமை மக்களை வியப்புக்குள்ளாக்கும் விடயமாக உள்ளது.

சிறைச்சாலை வளாகங்களினுள்கூட தூள் போன்ற போதைப்பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதில் சில உயர் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். இத்தகைய போதைப்பொருட்கள் உடலுக்கு மிகவும் தீங்கானது என்று குறிப்பிடுகின்றனர். ஐஸ் எனப்படும் போதைப் பொருளைப் பாவிப்பவர்களின் கண்கள் துரிதகதியில் பாதிப்படையும் எனக் கூறப்படுகின்றது. அவற்றைப் பாலியல் தூண்டுதல் நோக்கங்களுக்காகப் பெற்றுக்கொள்வதாகக் கூறப்படுகின்றது. எனினும், இதனால் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்படுவதுடன், அவற்றைப் பாவிப்போர் தமது இச்சைகளைத் தீர்த்துவிட்டு மிக மோசமான முறையில் அச்சிறுவர்களைக் கொலை செய்யும் போக்கும் நாட்டில் அதிகரித்து வருகின்றது.

கொரோனா அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சியைப் போலவே, போதைப் பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். போதைப் பொருட்களை நாட்டுக்குள் கொண்டு வருபவர்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம், போதைப் பொருள் பாவனையை நாடிச் செல்பவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும்.

**எச். ஐ சமன்மலி**

# ஒருவருடம் பயணித்த பாதை...




2020 சர்வதேச மகளிர் தின கொண்டாட்டம் கிளிநொச்சியில்



கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்களின் கோரிக்கைகள் உள்ளடங்கிய முன்மொழிவை ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு சமர்ப்பித்தல் பற்றிய கலந்துரையாடல்



கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் தாய்மாருக்கான உலர் உணவு விநியோகம்




பெண்களுக்கெதிரான வன்முறையை இல்லாதொழிக்கும் சர்வதேச தினக் கொண்டாட்டம் வவுனியாவில்



கொவிட் 19 இன் பின்னர் தொழிலுக்கு ஏற்பட்ட தாக்கம் பற்றிய கலந்துரையாடல் கட்டுநாயக்கவில்



கைபேசி ஊடகவியல் தொடர்பான பயிற்சி




சர்வதேச தொழிற்சங்க சந்திப்பு கொழும்பில்



தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித் தொடரின் இறுதிக் கட்டம்



தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சி வவுனியாவில



தரப்பினர்களுடனான சந்திப்பு வவுனியாவில




பலதரப்பு கலந்துரையாடல் தொடர் கிளிநொச்சியில்



பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் கர்ப்பிணித் தாய்மாருக்கான உலர் உணவு விநியோகம்

இல, 221, வெலபட வீதி, கட்டுநாயக்கவை வசிப்பிடமாகக் கொண்ட எச்.ஐ.சமன்மலி ஆகிய என்னால் ரத்வெகி அச்சகத்தில் அச்சிடப்பட்டது.